# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



செய்திமடல் - 6 | 30-06-2011

23-06-2011

## தலைப்பு : மதங்களின் தோற்றம்

**இத்தலைப்பில் இதயராஜா அவர்களின் தொடக்கவுரையுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்கள் வருமாறு,**

*1. மனிதன் ஆறாவது அறிவைப் பெற்று மனிதனாகப் பரிணமித்து வாழத்தொடங்கிய ஆரம்காலத்திலேயே மதமென்ற பெரு விருட்சத்திற்கு விதை போடப்பட்டுவிட்டது.*

*2.தனது வலிமையால் தன்னையும் தனது கூட்டத்தினையும் காத்துக் கொள்ள முடியாமற்போன காலகட்டத்தில், அவன் தனது சக்திக்கு மேலான ஒரு சக்தி இருப்பதாகவும் அதை வேண்டிக்கொள்வதன் மூலம் தமக்குப் பயன் கிடைக்குமென்ற எண்ணமும் அவன் மனதில் தோன்றியன.*

*3.இயற்கை அனர்த்தம், கொடிய விலங்குகள் என்பவறிறிலிருந்து பாதுகாப்புப் பெறவும், வேட்டையாடவும் மனிதன் கூட்டமாக வாழவேண்டிய தேவை இருந்தது. தமது வாழிடத்தில் தமக்கு உதவிசெய்த, அச்சுறுத்திய இயற்கைச் சக்தியை வழிபடத் தலைப்பட்டான் அதுவே அவர்களின் தெய்வமாயிற்று, அதுவே பயபக்தியாயிற்று.*

*4. மனிதன் கடவுளைத் தன்னைப் போலவும் தன்னைவிடப் பலமடங்கு ஆற்றலுள்ளவராகவும் (பல கரங்கள், தலைகள், ஆயுதங்கள்) படைத்தான். தனக்கு விருப்பமானவற்றினைக் கடவுளுக்கும் செய்தால் பிரீதி ஏற்படும் என நினைத்தான்.*

*5.இயற்கைச் சக்தியைத் தனிமையில் "எம்மைக்காத்தருள்" என்று வழிபட்ட மனிதன், படிப்படியாகத் தனது கூட்டத்தினருடன் கூட்டமாக வழிபடத் தொடங்கினான். அக்காலத்தில் வழிபடுவதற்கென ஒரு நிரந்தர இடம் இருக்கவில்லை. அதற்கான சாத்தியமும் அப்பொழுது இல்லை. காரணம் அவர்கள் இடம்பெயர்ந்தபடி இருந்தமை.*

*6.மனிதன் விவசாயத்தில் ஈடுபட்டு குளங்கள், நதிகள் முதலிய நீர்நிலைகளின் அருகில் நிலையாக வழத் தலைப்பட்டபின், வழிபாட்டுக்கெனத் தனியான இடங்களை ஒதுக்கிக்கொண்டான்.*

*7. வழிபாட்டு இடத்தினைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் வழிபாடு நடத்தவும் ஆட்களை நியமித்தான். அவர்களே அறங்காவலர்கள், பூசாரிகள், அர்ச்சகர், புரோகிதர் ஆயினர்.*

*8.ஒவ்வொரு மனித குழுமத்திலும் தோன்றிய ஆன்றோர் தத்தமக்குரிய வழிபாட்டு முறைகள், கட்டுப்பாடுகள், ஒழுக்கவிதிகள், சடங்கு சம்பிரதாயங்களை வகுத்தனர். படிப்படியாக உருவாக்கப்பட்ட அவற்றையே மந்திரங்கள் என்று கூறுகின்றோம்.*

*9.மனிதர்களின் சிந்தனை சக்தி வளர வளர அவர்களது மனங்களில் கடவுள் கொள்ளைபற்றிய பற்பல கேள்விகள் தோன்றத் தொடங்கின. தமது அறிவுக்கும் அனுபவத்திற்கம் சக்திக்கும் உட்பட்டேவாறு அக்கேள்விகளுக்கான விடைகளையும் விளக்கங்களையும் தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொண்டனர். வேறு சிலர் விடைகளைத்தேடி அலைந்து பிற அறிஞர்கள் மூலமாகவோ அல்லது சுய அனுபவத்தின் மூலமாகவோ பெற்றுக் கொண்டனர். அவர்கள் வெளிப்படுத்திய உண்மைகளே மதங்களாக உருப்பெற்றன.*

*10.மனிதனின் வாழிடம், வாழ்க்கைமுறை, சமூகநிலை, பொருளாதாரக் கட்டமைப்பு, ஆட்சி முறை, பண்பாடு நாகரிகம் போன்ற இன்னோரன்ன காரணிகளே அவனது சிந்தனையைக் கட்டமைக்கின்றன. இந்த வரலாற்று இயங்கியலுக்கு அமையவே அந்தந்தக் காலங்களுக்குரிய சிந்தனைகளும் அதன் பேறான தெய்வங்கள், வழிபாடு என்பன அமைந்துள்ளன. இனியும் அமையப்போகின்றன.*

*11.இனக்குழுமுறை சிதையாத கட்டமைப்பே இந்தியச் சமூகம். எனவே பழங்கால தெய்வ வழிபாடுகள் இன்றும் நிலவுகின்றன. இங்கு பேரரசு உருவாக்கம் பூரணத்துவம் அடையாமையால் சிறுதெய்வ வழிபாடு சாத்தியமாயிற்று.*
*அதனூடாக ஒரு தெய்வக் கோட்பாட பரிணமிக்கின்றன.*

*12.ஜரோப்பிய சமூகத்தில் இனக்குழுமுறை முற்றாக அழிக்கப்பட்டு வர்க்க சமூகம் கட்டமைக்கப்படும்போது, அத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஒரே ஒரு தெய்வம் தேவைப்படுகின்றத. அதனாலேயே அங்கு எல்லாம் வல்ல ஒருதேவன் இக்கின்றான்.*

*13. கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள், இந்துக்கள் போன்ற சிறு தெய்வங்களை நம்புகின்றார்கள் ஆனால் தெய்வம் என்ற நிலையில் இல்லாமல் சக்திவாய்ந்த தேவதைகளாகவே கொள்கின்றனர். அங்கு பேரரசும் சக்கரவர்த்தியும் வைத்ததே சட்டம், என்ற நிலையில் அதற்குமேல் ஒருவரும் தேவைப்படவில்லை.*

*(மிகுதி பக்கம் 2 இல்)*



*சோமசுந்தரப் புலவர் (மே 25, 1878 - 1953, நவாலி, யாழ்ப்பாணம்) தங்கத் தாத்தா என அன்பாக அழைக்கப்பட்டவர். ஏறக்குறையப பதினைந்தாயிரம் செய்யுள்களை இயற்றியுள்ளார். ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை போன்ற பல செய்யுள்களை சுவையான முறையில் எளிய தமிழில் பாடியுள்ளார். பலவகைப் பக்திப் பாடல்களையும் அவர் இயற்றியிருக்கின்றார். பனையின் பெருமைகளைக் கூறும் தாலவிலாசம், கதிர்காமம் முருகக் கடவுளைக் குறித்து பாடிய கதிரைச் சிலேடை வெண்பா புகழ் பெற்றவை.*

*"குருமடம் புகுந்தவுருவி லாக்காமன்*
*கல்விச்சாலையை பெற்றமிழ்ப் பித்துத்*
*தாய் மொழிமடவார் வாய்மொழியாக்கிச்*
*சமயமும் லீலாசமயமாய்ச் செய்து*
*நிகலில் தீக்கை நிருவாணமாக்கிச்*
*சந்நிதானங்கள் தந்நதானம் விடக்*
*குன்றிலுங்க குழியிலும்*
*விழுத்திவருகின்றான்"*

*ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தேசிய விழிப்புணர்வை உருவாக்க இவர் பாடல்கள் ஏதுவாக்கப்பட்டமை வியக்கத்தக்கதொன்றாகும். 'உயிரிளங்குமரன்' நாடகத்தில் கமத்தொழில், நெசவுத் தொழில் என்பனவற்றை மக்கள் அலட்சியம் செய்தமையை எடுத்துக்காட்டியும் அத்தொழில்களின் சிறப்பினையும் சுட்டிக் காட்டியதனால் மக்களிடையே மறுமலர்ச்சி ஏற்பட்டது.*

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்ச்சித்திசையில் மாற்றியமைக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

# கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும்

*30-06-2011* அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள்
-சி. சிவசேகரம்

1 கருத்துமுதல்வாதம் என்பது உணர்நிலை, எண்ணம், உளவியல், ஆன்மிகம் என்பனவற்றை முதன்மையானவையாயும் அடிப்படையானவையாயும் சடப்பொருள், இயற்கை, இயற்பியற் பண்புடையன என்பனவற்றை இரண்டாம் நிலையினவாயும் பெறப்பட்டனவாயும் நிபந்தனைக்குட்பட்டனவாயும் கொள்கிறது.

2 பொருள்முதல்வாதம் என்பது மனித அறிவும் உணர்நிலையும் பொருளை அடிப்படையாகக் கொண்டே எழுகின்றன எனக் கொள்கிறது. இப் பிரபஞ்சத்தின் இயற்கையில் அனைத்தும் பொருள் சார்ந்தன என்பதால், இயற்கைக்குப் புறம்பான எதுவும் நிகழ்வுகளை ஆளுவதில்லை எனப் பொருள்முதல்வாதம் கொள்கிறது. இயற்கை நிகழ்வுகளைச் சரிவர விளங்கிக் கொள்ள இயற்கைக்குப் புறம்பான எதையும் நாட இயலாது எனவும் பொருள்முதல்வாதம் கொள்கிறது. .

3 மெய்யியலின் அடிப்படையான பிரச்சனை, இருப்பிற்கும் எண்ணத்திற்குமுள்ள உறவையும் ஆன்மிகத்திற்கும் சடப்பொருளுக்கும் உள்ள உறவையும் பற்றியது எனலாம். கருத்துமுதல்வாதம் அவற்றின் இருப்பும் அறிவும் சார்ந்த துறைகளில் மெய்யியற் பிரச்சனைகட்குத் தீர்வு தேடும் முறையில் பொருள்முதல்வாதத்தை மறுத்து நிற்கிறது.

4 மேற்கூறிய வேறுபாட்டின் காரணமாக அறிவின் தோற்றுவாய், மனித இருப்பு, உலகினதும் உயிர்களினதும் தோற்றம் போன்ற பல விடயங்களில் கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும் தம் அடிப்படையிலேயே முரண்படுகின்றன.

5 யதார்த்தம் என்பது எவ்வகையிலோ உள்ளத்தைச் சார்ந்தது எனவும் அதினின்று சுயாதீனமானதல்ல எனவும் கொள்ளும் எந்த மெய்யியலையும் கருத்துமுதல்வாதம் எனக் கொள்ளலாம். குறுகிய நோக்குடைய கருத்துமுதல்வாதம், யதார்த்தத்தைப் பற்றிய நமது புரிதல், முதன்முக்கியமாக நமது உள்ளத்தின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது எனவும் அதற்குப் புறம்பாகப் பொருட்களின் இயல்பு என்பது பொருளற்றது எனவும் வாதிடும். (இக் கொள்கையை அதன் அபத்தத்தின் எல்லைக்கே கொண்டுபோகலாம்: தீவிர நிலையில், ஒரு கருத்துமுதல்வாத மெய்யியல் நமது உள்ளங்கட்கு வெளியே உலகு இல்லை என்று கூற இடமுண்டு.)

6 எனவே, இயற்பொருட்கள் அனைத்தையும் அனுபவங்களையும் உள்ளத்தின் அல்லது அதனினும் உயரிய ஒன்றின்; பெயராண்மைகளாகக் (சநிசநளநெவெவழைளெ) கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் கருத்துமுதல்வாதம் என மெய்யியல் கருதுகிறது. அதனால், மதங்கள் யாவும் கருத்துமுதல்வாதம் என்ற வகைக்குள் வருகின்றன.

7 மனம் என்பதன் இயல்பென்ன, அது மனித உடலுக்கும் இயற்கைக்கும் புறம்பானதா என்பன போன்ற வினாக்களிற் தொடங்கிக் கருத்துமுதல்வாதிகள் தம்முள்ளே கடுமையாக முரண்படுகின்றனர்.

8 பொருள்முதல்வாதிகள் அனைவரும் ஒத்த கருத்துடையோரல்ல. அவர்களது அணுகுமுறைகளும் வேறுபடுகின்றன. மூர்க்கத்தனமான பொருள்முதல்வாதம், ஐம்புலன்கள் நேரடியாக உணராதவற்றை --மறைமுகமாகப் பெறக்கூடிய அறிவின் தேவையை-- மறுக்கிறது.

9 விஞ்ஞானம், பொருள்முதல்வாத நோக்கை வேண்டி நிற்கிறது. எனினும் தாழ்நிலை அறிவிலிருந்தே அதுவும் விருத்தி பெற்றதாலும்; சமூகத்தில் மதத்தின் மேலாண்மையாலும் அது கருத்துமுதல்வாதப் பாதிப்புக்கட்கு உட்பட்டே வந்துள்ளது.

10 பழம் மரபுகளில் இருந்து வந்த பொருள்முதல்வாத மெய்யியல்கள்; தோற்றது ஏன் என உரையாடலின் போது ஆராய்வோம்.

**மதங்களின் தோற்றம்**

*முன் பக்கத் தொடர்ச்சி..*

14. எனவே மனிதன் தனது ஆறாவது அறிவைக் கொண்டு ஏன்; எதற்கு; என்று சிந்திக்கத் தலைப்பட்டபொழுது, இன்றைய விஞ்ஞானக் களஞ்சியங்கள் அவனிடம் இல்லை. முயன்று தவறியே அனைத்தையம் கற்றுக்கொண்டான். நெருப்பைக்கண்டு பிடித்தது, கற்களை ஆயுதமாக்கியது அனைத்துமே பெரிய சவால்களுக்கு மத்தியிலேயே. ஆகவேதான் தனது அன்றைய கேள்விக்கு இயற்கைச்சக்தி அச்சமூட்டுவதாகவும் அதுவே அனைத்துக்கும் மூலமாகவும் தெரிந்தபோது அதனை வழிபட்டு வேண்டுதல் செய்தான். ஆனால் அறிவு வளரந்து ஆற்றல்கள் பல பெற்றபொழுதிலும், சுரண்டும் வர்க்கம் தமக்குச் சாதகமாகத் தத்துவத்தினையும் கடவுளையும் பயன்படுத்திக்கொள்கின்றன. இன்னல்களுக்குத் தீர்வு கிட்டாத மனிதர்கள் புதிய மார்க்கத்தைத் தேடாமல், விரித்த வலையிலேயே மீண்டும் மீண்டும் வீழ்த்தப்பட்டுக் கிடக்கின்றனர்.

**தாய்வழிச் சமூகமும் பெண்தெய்வங்களும்**

விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்ந்த மனித சமூகத்தின் முதல் தேவையும் இறுதித் தேவையாகவும் இருந்தது உணவுதான். அதைத் தேடுவதுதான் அவர்களின் வாழ்நாளாயிற்று. விலங்குகளுக்கும் மனித இனத்திற்கும் வித்தியாசம் காலில் நடப்பதும் ஓரளவு சிந்திக்கும் திறனைப் பெற்றது மட்டுமேயாம். மொழி கூட பல காலங்கள் கடந்த பின்பே தொன்றியது. எனவே விலங்குள் போன் பாலியல் நடத்தையே மனிதர்களிடமும் காணப்பட்டது. அதனால் பிள்ளை பெற்ற பெண்தான் குழந்தைக்குத் தாய் என்ற அந்தஸ்தினைப்பெற்றாள். தந்தை என்ற எண்ணக்கருவுக்கே அப்பொழுது இடமில்லை. தாயை முன்னிறித்தியே மனிதக் கூட்டம் ஒரு கழுவாக வாழந்தது. அதுவே தாய்வழிச் சமூகத்தின் ஆரம்பம் எனலானம்.

தாயை முன்னிறுத்தி அவளின் தலைமையிலேயே வேட்டையாடினர். அந்தக் குழுவிற்கு அவளே யாவுமாயினாள். அவளின் மரணத்திற்குப் பின் அவளின் மகள்களில் வல்லமையுள்ளவள் தலைமை தாங்கினாள். இவ்வாறான சமூக அமைப்பில் தாயின் மரணத்திற்குப் பின்பர் அவள் மரியாதைக்குரிய போற்றுதற்குரிய உயர்ந்த நிலையினை இயல்பாகவே பெற்றாள். கால ஓட்டத்தில் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டாள். இந்தப் பின்னணியில் தாய்த்தெய்வ, பெண்தெய்வ வழிபாட்டினை நோக்கின் புரியாத பல வினாக்களுக்கு விடைதேட முடியும்.

வேட்டை ஆடி வாழ்ந்த மனித இனக்குழுக்கள் தமக்கிடையே மோதலில் ஈடுபடத் தொடங்கிய பொழுது, யுத்தத்திற்கு ஆண்கள் தலைமைதாங்க முற்பட்டபொழுது, அதிகாரம் ஆண்களின் கைகளிற்கு மாறத்தொடங்கியது. படிப்படியாக ஆண்கள் தமது உடமையாகப் பெண்களையும் குழந்தைகளும் கொள்ள முற்பட்டபொழுதுதான் குழந்தைக்குத் தந்தை என்ற எண்ணக்கரு தொடங்கிற்று. ஒரு ஆண் பல பெண்களையோ அல்லது ஒரு பெண்ணையோ தனது உடமையாக்கி அவர்களை மற்ற ஆண்கள் அணுகமுடியாத சமூகக்கட்டமைவு ஆரம்பித்தபின்பே தந்தை வழிச் சமூகம் தோற்றம்பெறுகின்றது. தாய்வழிச் சமூகம் போல் இங்கும் ஆண்தெய்வங்கள் தோற்றம் பெறுகின்றன.

**மதங்களின் நான்கு தூண்கள்**

1. தலைமுறை தலைமுறையாக ஏற்பட்டுவந்த நம்பிக்கைக் கடத்தல்.
2. இனக்குழு வாழ்முறையும் அதன் எச்சசொச்சங்களும்.
3. அதிகார வர்க்கம் தமது இருப்பினை நிலைநிறுத்துவதற்கான வழிமுறைகள்.
4. யதார்த்த உலகினை மறுத்து கற்பனை உலகில் சஞ்சரிக்கும் கருத்துருவாக்கமும் தத்துவப் புனைவுகளும்.

**உசாத்துணை நூல்கள்:**

01 உலக மதங்கள - சி.வ.இரத்தினசிங்கம்
02. விஞ்ஞான லோகாய வாதம் - ராகுல் சாய்கிருத்தியன்
03. ஐரோப்பியத் தத்துவ இயல் - ராகுல் சாய்கிருத்தியன்
04. இந்துதத்துவ இயல் - ராகுல் சாய்கிருத்தியன
05. பவுத்தத் தத்துவ இயல் - ராகுல் சாய்கிருத்தியன
06. இஸ்லாமிய தத்துவ இயல் - ராகுல் சாய்கிருத்தியன
07. உலக வரிவடிவம் - ராகுல் சாய்கிருத்தியன
08. மனித சமுதாயம் - ராகுல் சாய்கிருத்தியன
09. வால்காவிலிருந்து கங்கைவரை - ராகுல் சாய்கிருத்தியன
10. சிந்துமுதல் கங்கை வரை - ராகுல் சாய்கிருத்தியன
11. சமணமும் தமிழும் - மயிலை சீனி வேங்கடசாமி
12. பெத்தமும் தமிழும் - மயிலை சீனி வேங்கடசாமி
13. களப்பிரர் காலம் - மயிலை சீனி வேங்கடசாமி
14.. இந்துத்துவமும் இந்து சமயம் சமூக மாற்றங்கள் - ந.இரவீந்திரன்
15. மதமும் மாக்ஸிசமும் - ந.இரவீந்திரன்